அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் .................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

இலக்கியம்..........................................................2

சிலப்பதிகாரம்......................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். ......................................................... 6



சிந்தனை 7 செயல் 11 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் அக்டோபர் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## தலைவனும் - தகுதியும்

ஒவ்வொரு தொழிலுக்கும், பொறுப்புக்கும் சில அடிப்படைத் தகுதிகள் தேவைப்படுகின்றன. ஒரு தொழிலுக்குரியத் தகுதிகளைப் பயிற்சியின் மூலம், அறிவின் மூலம் பெற்றுவிடலாம். ஆனால் ஓர் உயர் பொறுப்புக்கு - தலைமைக்கு உரிய தகுதிகளை அவரவர் கொண்டுள்ள நற்பண்புகளே தீர்மானிக்கின்றன. மன்னராட்சியில் மன்னர்கள், வீரம் செறிந்தவர்களாக, நீதிநெறித் தவறாதவர்களாக, இருக்க வேண்டும். இல்லையென்றால் நாடு அழிந்துவிடும். அதனால்தான் **அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்** என்றார் வள்ளுவர்.

இதேபோல்தான் இன்றையக் குடியாட்சியிலும் தலைவராக விரும்புகின்றவர்களுக்கும் சில தகுதிகள் தேவைப்படுகின்றன. பொதுவாழ்வில் தன்னலமற்ற ஈடுபாடு, எளிமை, நேர்மை, நாட்டைப் பற்றிய தெளிந்த சிந்தனை போன்ற பண்புகளே ஒரு தலைமையிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகளாகும். இத்தகையத் தகுதிகளில் ஒன்றுகூட இல்லாதவர்கள் கூட தலைமையேற்கத் துடிப்பதும், அதற்காக நெறியற்ற செயல்களில் ஈடுபடுவதும் - நாட்டின் வளர்ச்சியையும், மக்களின் முன்னேற்றத்தையும் கடுமையாகப் பாதித்துவிடும்.

அரசியல் துறை மட்டுமல்ல, எந்தவொரு துறையாக இருந்தாலும் அதில் ஈடுபடுபவர்கள் அதன் மாண்பைக் காக்க வேண்டும். இல்லையென்றால் அந்தத் துறைக்கு வரக்கூடாது. இதைத்தான் வள்ளுவர் சொன்னார்,

**தோன்றின் புகழோடு தோன்றுக, அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

என்று.

**திடீர் தலைவர்களும், ஊடகத் தலைவர்களும்:**

சிலர், நேற்று பெய்த மழையில் இன்று முளைத்தக் காளான் போல் திடீரெனத் தலைவர் ஆகிவிடுகிறார்கள். தலைமை என்பது மாறுவேடப் போட்டியல்ல! “எதிர்ப்பு அரசியல்” என்ற ஒன்றை மட்டும் முன்நிறுத்தி சிலர் தலைவர் வேடம் புனைவதும், அவர்களை ஊடகங்கள் மீண்டும், மீண்டும் காண்பித்து ஒரு மாயைத் தோற்றத்தை உருவாக்குவதும் ஆரோக்கியமான தல்ல. தலைவர் - தலைமை என்பது செயல்களால் கணிக்கப்பட வேண்டும்; முன்னிலைப் படுத்தப்பட வேண்டும். யாரையாவது தலையில் தூக்கி வைத்துக்கொண்டு தலைவன் என்று கொண்டாடுகின்ற ஒரு பிற்போக்கான நிலைமை மக்களிடம் காணப்படுவது வேதனையளிப்ப தாகும் வெட்கக்கேடானதாகும்.

இப்பொழுது இளைஞர்கள் சிலர், உணர்ச்சிவசப்பட்டு குரல் எழுப்புகிறார்கள், இவர் தலைமையேற்றால் நன்றாக இருக்கும்; அவர் தலைமையேற்றால் நன்றாக இருக்கும் என்று. **தலைமை என்பது ஆயத்த ஆடையல்ல, அப்படியே எடுத்து அணிந்து கொள்வதற்கு. பருத்தி பஞ்சாகி, பஞ்சு நூலாகி, நூல் துணியாகி, துணி ஆடையாக வடிவெடுப்பதே தலைமை**

ஒருவர் ஒரு துறையில், நேர்மையாக இருந்து சிறப்பாகப் பணியாற்றுகிறார் என்பதற்காக அவர் அரசியலில் தலைவராகிவிட முடியும் என்று எதிர்பார்ப்பது தவறு. நன்றாக நடிப்பது, நன்றாக எழுதுவது, நன்றாகப் பாடுவது எல்லாம் தனிப்பட்ட திறமைகளே அவையெல்லாம் தலைவனைத் தீர்மானிப்பதல்ல.

அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். தவறில்லை. ஆனால் தலை வனுக்குரியப் பண்புகளும், உழைப்பும், விடாமுயற்சியும், திடமான சிந்தனையும் இருக்கின்றதா என்பதுதான் கேள்வி!



(மார்ச் 2017 தமிழ்அறம் இதழில் நான் எழுதிய தலையங்கம்)

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

மக்களது கலாச்சாரப் பண்புகளையும் அவர்களது கவலைகளையும் பற்றி அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சி செய்தார்கள். மற்ற ஐந்து நாடுகளுடன் ஒப்பிட்டதில் அமெரிக்க மக்கள் கவலை குறைந்த இனமாக முடிவு செய்தார்கள். அதாவது அமெரிக்க மக்கள் அதிகம் கவலைப்படுவ தில்லை. காரணம் ? வளமான பொருளாதார வாழ்வும், நேர்மை நிறைந்த ஓர் அரசியலும், நல்ல வாய்ப்புகள் தரும் ஒரு சமுதாய அமைப்பும் இருப்பதுதான் முக்கியக் காரணம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அந்த மூன்றிலும் நம்நாடு பின்தங்கி இருக்கிறது. நமது விரக்தி மனோபாவத்திற்கு அது ஒரு காரணம். சமுதாய நலனில் அக்கறை கொண்ட நல்லவர்கள், அறிஞர்கள், ஆட்சியா ளர்கள், அரசியல்வாதிகள் வளமான பொருளாதார வாழ்வையும், நேர்மை நிறைந்த ஓர் அரசி யலையும், வாய்ப்புகள் தரும் ஒரு நல்ல சமுதாய அமைப்பையும் உருவாக்க முன்வர வேண்டும்.

எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுவது வேறு. கவலைப்படுவது வேறு. கவலைப்படுபவன் குழம்பிய நிலையில் உள்ளவன்; தெளிவற்றவன்; பயப்படுபவன். மாறாக எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடும் போது நமது ஆசைகள் வெளிவருகின்றன. இலட்சியங்கள் வெளிவருகின்றன. செயலுக்கானத் திட்டங்கள் தயாராகின்றன. எதையும் சமாளிக்கும் இயல்பு வெளிவருகிறது.மனத்தில் ஒரு துடிப்பும் வேகமும் எழுகிறது .சாதனையின் வெற்றியை எண்ணி மனம் அசை போடுகிறது. செயல் வடிவம் பெறுகிறது. ஆனால் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் எதுவும் உருப்படியாக நடைபெறப் போவதில்லை. கவலையை உதறித் தள்ளுங்கள். செயலில் இறங்குங்கள்!



## இலக்கியம்.

முனைவர்.லெ.பாஸ்கர்

மனித வாழ்வின் இலக்கை இயம்புவது “இலக்கியம்”. நம் எண்ணங்களையும், சிந்தனை களையும் சொற்களில் பதிவு செய்வதே இலக்கியம். மனித நாகரிகம் தோன்றிய காலம் தொட்டு நம் மனதில் எழுந்து, நம் வாழ்வோடு கலந்துவிட்ட உறவுதான் இலக்கியம். கதை யாக, கவிதையாக, கட்டுரையாக, நாடகமாக தனிமனித சிந்தனையில் தோன்றி உலாவரும் இலக்கியம் ஓர் ஒட்டுமொத்த சமுதாயத்தையே மாற்றி அமைக்கிறது. அதற்கு வழிகாட்டுகிறது இலக்கியம் படிப்பதால் தனிமனிதன் மட்டும் முன்னேறுவதில்லை, ஒரு சமுதாயமே முன்னே றுகிறது. வாழ்வின் அச்சாணியாக தொன்றுதொட்டு விளங்கி வருவதே இலக்கியம்தான்.

அறிவியல் கண்டுபிடிப்புகள் நமக்குப் பல வசதிகளையும், நன்மைகளையும் தரலாம். ஆனால் இலக்கியம்தான் சீரான, ஒழுங்கான அகவாழ்வை நமக்குக் கற்றுத் தருகின்றது. மிகப் பெரிய சாதனையாளர்களைக் கூர்ந்து கவனித்தால் தெரியும் அவர்கள் எல்லோரும் எத்தகைய இலக்கிய ஆர்வம் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது. நமது அப்துல்கலாம் அவர்கள் மாபெரும் அணுவிஞ்ஞானி என்பது நாம் அறிந்ததே. அவர் ஒரு கவிஞர், இலக்கிய ஈடுபாடு உடையவர் என்பதும் அவரது புகழுக்குச் சிறப்பு தந்தது.

“யாதும் ஊரே! யாவரும் கேளிர்!,” “அறத்தான் வருவதே இன்பம்,” “அறம் செய விரும்பு!” போன்ற எண்ணற்ற இலக்கியப் பாடங்கள் இன்றளவும் மனித குலத்தை நல்வழியில் இயக்கிக் கொண்டிருக்கின்றன என்றால், இலக்கியத்தின் இன்றியமையாமையை நாம் நன்கு உணர முடியும். இளைஞர்களே! இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கதை, கவிதை, கட்டுரை ஏதாவது ஒன்றில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். அவை உங்களுக்கு இருளில் வெளிச்சத்தைக் காட்டும், வாழ்க்கை பேரின்பமாகும்!.



**வஞ்சிக்காண்டம். சேரன் செங்குட்டுவன், வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆரிய மன்னர்களை வென்று, கனக விசயர்களின் தலைகளில் கல்லேற்றிக் கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை அமைத்த வரலாறு கூறும் பகுதி.** **மரு.த.இராசலிங்கம்**

**சென்ற இதழ் தொடர்ச்சி**

மாடலன் கூறிய செய்திகளைக் கேட்டறிந்த சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன் மாண்ட பிறகு மதுரையில் நடந்த அரசியல் மாற்றம் குறித்துக் கேட்க, கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த மன்னன் **வெற்றிவேற் செழியன்** மதுரைக்கு வந்து நிலைமையைச் சீர்செய்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதாக மாடலன் தெரிவிக்கிறான். அத்துடன் கண்ணகியின் அறச்சீற்றத்தால் வறுமையடைந்திருந்த நாட்டை உய்விக்க களவேள்வியோடு கண்ணகிக்கு விழாவும் எடுக்க, மக்களின் துன்பம் நீங்கியது என்பதையும் எடுத்துரைக்கிறான் மாடலன்.

மாடலனுக்குப் பொன்னும், பொருளும் அளித்து மகிழ்கிறான் மாமன்னன் செங்குட்டுவன். அதன்பிறகு அங்கிருந்த ஆரிய மன்னரான நூற்றுவர் கன்னரை அழைத்து அவர்களையெல்லாம் அவர்களது நாட்டுக்குச் செல்லுமாறு அன்புடன் ஆணையிட்டு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, தன் படைவீரர்களுடன் சேரநாடு நோக்கிப் புறப்படுகிறான்.

தன்நாட்டு வேந்தனின் வடநாட்டு வெற்றியினைக் கொண்டாடும் விதமாக, வஞ்சி மாநகரமே விழாக்கோலம் பூண, குறத்தியர் மகிழ்ச்சியாக குறிஞ்சிப்பண் பாடுகின்றனர், உழவர்கள் ஓதைப்பாணி பாடுகின்றனர், கோவலர்கள் கூடியிருந்து குழலிசைத்து மகிழ்கின்றனர். அதோ! மாலைசூட்டிய வெண்கொற்றக் குடையின்கீழ், வாகை சூடிய சேரன் செங்குட்டுவன் பட்டத்து யானை மீதமர்ந்து வெற்றிக் களிப்போடு வஞ்சி மாநகருக்குள் வந்து கொண்டிருக்கிறான்.

வீதிகளில் மக்கள் வரிசையாக நின்று ஆரவாரம் செய்தவாறு மலர்தூவி மன்னனையும் படைவீரர்களையும் வரவேற்கின்றனர்.

செங்குட்டுவனின் பெருந்தேவியான வேண்மாள், முகமும் அகமும் மலர அவனை அரண்மனைக்குள் அழைத்துச் செல்கிறாள். படைவீரர்கள் தத்தம் வீடுகட்குத் திரும்பிச் செல்கின்றனர்.

பின்னர், இமயத்திலிருந்து கனக, விசயனின் தலையில் ஏற்றிக் கொண்டு வந்த கல்லில் கண்ணகிக்கு சிலை வடிக்க ஆணையிடுகிறான் மன்னன். திருச்செங்குன்றத்தில் கண்ணகிக்கு கோவில் கட்டி அங்கே கண்ணகியின் சிலை நிறுவப்படும் விழா பெரும்சிறப்பாக நடைபெறுகிறது. மக்கள் எல்லோரும் கண்ணகியைத் தெய்வமாகப் போற்றி வழிபடுகின்றனர்.

கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் திறந்த நந்நாளில், கனக, விசயரோடு சிறைபிடிக்கப்பட்ட ஆரிய மன்னர்கள் அனைவரையும் விடுதலை செய்து ஆணைப் பிறப்பிக்கிறான் செங்குட்டுவன் அவர்களை வஞ்சிமூதூரின் அழகிய மாளிகையில் தங்கியிருக்கச் செய்து தக்க மரியாதையுடன் அனுப்ப வில்லவன் கோதையைப் பணிக்கிறான். அவர்கள் எல்லோரும் மன்னனின் பெருந்தன்மையைப் போற்றிப் புகழ்ந்தவாறு தத்தம் நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்.

அடுத்து அழும்பில் வேளுடன் ஆயக்கணக்கரையும் அழைத்து, இறை செலுத்தும் மன்னர்கள் எவரும் இனி எமக்கு இறை செலுத்த வேண்டாம் எனவும் ஆணையிடுகிறான்.

கண்ணகிக்கு பூம்புகாரில் **தேவந்தி** என்றொரு தோழி இருந்தாலல்லவா? அவள் மதுரைக்கு வந்து மாதரியின் மகள் **ஐயை** யை உடன் அழைத்துக் கொண்டு சேரநாடு வந்து கண்ணகியின் கோவிலில் தொழுது, அழுது புலம்புகிறாள்.

மாதவியின் மகள் **மணிமேகலையும்** கண்ணகி கோவிலுக்கு வந்து வணங்குகிறாள்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோவில் கட்டி வழிபடுவதை அறிந்த, **சோழன் பெருங்கிள்ளி**யும் உறையூரிலே பத்தினிக்கோட்டம் அமைத்து விழா நடத்துகிறான். இலங்கை மன்னன் **கயவாகு** பீடிகை அமைத்து ஆண்டுதோறும் விழா எடுக்கிறான்.

கண்ணகி-கோவலன் வரலாற்றில் முப்பெரும் அறங்களை உரைத்த இளங்கோவடிகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இன்னொரு செய்தியையும் பதிவு செய்கிறார்.

**குமரியொடு வடவியமத்து**
**ஒருமொழி வைத்து உலகாண்ட**
**சேரலாதற்குத் திகழ்ஒளி ஞாயிற்றுச்**
**சோழன் மகள் ஈன்ற மைந்தன் ...**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில் இமயம் முதல் குமரி வரை தமிழ்மொழியே அரச மொழியாக இருந்தது என்பதே அந்தச் செய்தி!

..........சிலப்பதிகாரம் முற்றுப் பெற்றது.

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- மருதக்கலி

மருதநிலம், நீர்வளமும், வயல்வளமும் மிகுந்த பகுதியாகும். ஊடலும், ஊடல்நிமித்தமும் இத்திணையின் உரிப்பொருளாகும். வளம் கொழிக்கும்போது அங்கே போக நுகர்ச்சியும் மிகுதி யாகிவிடுகிறது. இந்தப் பின்னணியைக் கொண்டு மருதக்கலியைப் படைத்து, அங்கு வாழும் தலைவன் - தலைவியின் மன உணர்ச்சிகளை உவமையழகுடன் காட்டுகிறார் மருதன் இள நாகனார்.

மதுரை நகரில் வைகையாறு ஓடுகின்ற காட்சியை உவமையழகுடன் இவ்வாறு கூறுகின் றார் இளநாகனார். கார்காலம் உச்சத்திலிருக்க, ஆற்றின் இருமருங்கும் மரங்கள் பூத்துக் குலுங்க, ஒரு பெண் பூச்சூட்டியிருப்பது போல் வைகை ஓடுகிறதாம். மதுரை நகரமே தன்னைச் சுற்றிலும் பூமாலையிட்டு மகிழ்ந்திருப்பது போல் வைகையாறு மதுரையைச் சுற்றி ஓடுகிறதாம்.

**கார் முற்றி, இணர் ஊழ்த்த கமழ் தோட்ட மலர் வேய்ந்து**
**சீர் முற்றி, புலவர் வாய்ச் சிறப்பு எய்தி, இரு நிலம்**
**தார் முற்றியது போல, தகை பூத்த வையை தன்...**

என்று வைகையைப் பாடி மகிழ்ந்த நாகனார், தொடர்ந்து மதுரைக் கோட்டையின் பெருமையையும் இவ்வாறு பாடுகிறார்

**நீர் முற்றி, மதில் பொரூஉம் பகை அல்லால், நேராதார்**
**போர் முற்று ஒன்று அறியாத புரிசை சூழ் புனல் ஊரான்.**

அதாவது வைகைநீர் மதுரைக் கோட்டையில் மோதுமேயன்றி, பகைவர் யாரும் போருக்கு வந்து அதனை வளைத்ததே இல்லை! அப்படிப்பட்ட மதுரையூரன் என் கணவன் என்று தலைவி சொல்வதாக உவமையழகுடன், வைகையையும், மதுரையையும் பெருமையுடன் அறிமுகம் செய்கிறார் இளநாகனார்.

அன்னப்பறவை ஒன்று தன் பெடையுடன் ஒரு பொய்கையிலே விளையாடிக் கொண்டிருக் கிறது. அப்பொழுது அகன்ற தாமரை இலை ஒன்று அன்னச் சேவலை மறைக்கவும், “சேவலைக் காணோமே!” என அந்த மடப்பெடை கலங்குகிறது. அந்த நேரத்தில் வானத்து முழுநிலவின் நிழல் நீருள் தோன்ற, அதைத் தன் சேவலோ வென மயங்கி அதன்பால் ஓடுகிறது. அப்பொழுது எதிரே வருகின்ற சேவலைக் கண்டு நாணம் கொள்கிறது பெடை.

**மணி நிற மலர்ப் பொய்கை, மகிழ்ந்து ஆடும் அன்னம் தன்**
**அணி மிகு சேவலை அகல் அடை மறைத்தென**
**கதுமென காணாது கலங்கி, அம் மடப் பெடை**
**மதி நிழல் நீருள் கண்டு, அது என உவந்து ஓடி**
**துன்னத் தன் எதிர் வருஉம் துணை கண்டு, மிக நாணி.**

இயல்பான நிகழ்வுதான், அதிலும் ஓர் உவமையழகு!

**மரு.த.இராசலிங்கம்**













***மக்கள் சக்தி இயக்கம் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம்*** **மதுரையில்** 12.10.2025 அன்று மாநிலத் தலைவர் **மருத்துவர்.த.இராசலிங்கம்** தலைமையில் மாநிலப் பொதுச் செயலாளர் **முனைவர் லெ.பாஸ்கர்**, மாநிலப் பொருளாளர் **கே.சி.நீலமேகம்** முன்னிலையில் நடைபெற்றது. திருவள்ளுவர் விருது மதுரை திருக்குறள் பேரவையின் மதிப்புறு தலைவர்.திரு. **கார்த்திகேயன் மணிமொழியன்** அவர்களுக்கும், டாக்டர்.எம்.எஸ்.உதயமூர்த்தி விருது மாநில துணைச்செயலாளர் கரூர் **சுகுமார்** அவர்களுக்கும், பேராசிரியர் சண்முகம் விருது மதுரை மாவட்டச் செயலாளர் **பெ.சேகர்** அவர்களுக்கும் வழங்கப்பட்டது. மாநிலத் துணைத்தலைவர் **வழக்கறிஞர் அ.அசோகன்**, **முனைவர்.க.பெரியசாமி**, மாநிலத் துணைச்செயலாளர் **இரா.இளங்கோ** மற்றும் மாவட்டச் செயலாளர்கள் **திரு.கந்தசாமி**, **முனைவர் முருகானந்தம்**, **முனைவர் புகழேந்தி**, **திரு.க.சிவக்குமார்**, **திரு.வை.க.முருகேசன்**, **திரு.குமரன்**, **கவி.கலியுகன் கோபி** உட்பட 72 பண்பாளர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்ட ஏற்பாடுகளை திரு.அசோகன், திரு.சேகர் செய்திருந்தனர்.
**நேதாஜி சாமிநாதன்** அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## அரும்பு வணக்கம்...

மனப்பரிமாற்றம்
மரியாதை
மகுடமாகிறது!

பணிவதால்
பாராமுகம்
புன்னகைக்கிறது!

வணங்காமுடிகளையும்
வளைய
வைக்கிறது!

ஆதாயத்திற்கு
ஆணிவேர்களையும்
அசைத்துவிடுகிறது!

கைகூப்பிவிட்டு
கால்களால்
நழுவுகிறது!

குடைச்சல்களுக்கும்
குழைவுகளுக்கும்
விடையாகிறது!

பண்பாடெனப்
பொன்னாடைப்
போர்த்தி மகிழ்கிறது!

குறும்பு மனிதருக்கும்
அரும்பு வணக்கம்
சிம்மாசனமளிக்கிறது!

கவிஞர். கலியுகன் கோபி. சென்னை

## கைபேசி.

நல்லவனா?கெட்டவனா?
நானிலம் அறிந்திடுமோ?
நல்லவனுக்கு நல்லவனே
கெட்டவனுக்குக் கெட்டவனே!

அவசரத்தில் அழைத்திட
ஆபத்தில் காப்பேனே
அல்லும் பகலுமாய்
அகலா நண்பனாவேன்!

கல்விக் கருத்தூன்றிக்
காலமும் காத்திடுவேன்
திறன்கள் வளர்த்திடவே
தீபச் சுடராவேன்!

கண்டம் கடந்தோரை
அண்டை அழைத்தே
கண்டு மகிழ்ந்திட
காட்சித் தூதாவேன்!

வங்கி நடையேறாது
வரவு செலவுகளை
வான்வழி நடத்திடவே
வசதியான வரமாவேன்!

எண்ணக் கனவுகளை
திண்ணமாய் விதைத்திட
வண்ணக் கோபுரமாய்
உண்மை உரைப்பேனே!

தேவைக்குப் பயன்படுத்த
திங்களாய் ஒளிர்வேன்
தேவையின்றி பயன்படுத்த
திறன்குன்றிப் போவேன்!

நானின்றி நானிலத்தில்
அசையாது அணுவுமென்று
அனைவருமே அரவணைக்கும்
அற்புத ஆதாரம் நானே!

கவிஞர்.ஆசிரியர் க.தேவிகா
தூத்துக்குடி